2013 மே 14]

494—

கால்நடை மருத்துவமனை

***7488—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியிலுள்ள தரமுயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு 2013—2014 ஆம் நிதியாண்டிலே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். “வரம் கேட்கும் முன்பே கொடுக்கும் அன்னை” என்று சொல்வதைப்போல, இங்கே கேள்வி வருவதற்கு முன்பே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா! உண்ணாது உழைத்து, உறங்காது விழித்து, இந்த மண்ணை ஆளும் ஆய கலைகள் அனைத்திற்கும் அரசியான எங்கள் ஆதிபராசக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) அன்றாடத் திட்டங்களும், அதிசயிக்கும் சட்டங்களும் கொண்டு வந்த நீதிதேவதையே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆதரவற்ற ஏழைப் பெண்களின் வாழ்க்கை, ஏற்றம் பெற வேண்டுமென்பதற்காக, விலையில்லா கறவை மாடுகளும், ஆடுகளும் வழங்கி, வெண்மைப் புரட்சியைக் கொண்டு வந்த அருட்கொடையே! (மேசையைத்*

தட்டும் ஒலி) கோடி சிங்கங்களின் தைரியம் குடியிருக்கும் வீரத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால இந்தியாவை வல்லரசாக்கும் வல்லமை பெற்ற கம்பீரத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) வீரத்திற்கு வேலு நாச்சியார், மருத்துவத்திற்கு டாக்டர் முத்துலட்சுமி, சுதந்திரத்திற்கு தில்லையாடி வள்ளியம்மை, பெண் உரிமைக்கு அன்னிபெசன்ட், பொதுநல சேவைக்கு அன்னை தெரசா, 'அம்மா' என்ற சரித்திரத்தை ஈன்றெடுத்த அன்னை சந்தியா, (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களை ஒருங்கே பெற்று, ஒருருவாய் வாழும் நான் அனுதினமும் வணங்கும் கடவுள் என் தாய் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களை பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்த நான் வணங்கும் கடவுள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும், எங்களைப் போன்று அன்போடு 'அம்மா' என்று அழைக்கும் கால்நடைகள் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியிலுள்ள திருநன்றியூர், திருத்தங்கூர், கொண்டல், முதலைமேடு ஆகிய பகுதிகளிலுள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த ஆண்டே புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, கடந்த 2012–2013 ஆம் ஆண்டிலேயே, 212 கோடி ரூபாயை ஒதுக்கி, 964 கட்டடங்களைக் கட்டிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த

அடிப்படையிலே, இந்த ஆண்டு, 2013—2014 ஆம் ஆண்டில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கிராமங்களை ஆய்வு செய்து, புதிய கட்டடம் கட்ட பரிசீலிக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியிலுள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளுக்கும் இந்த ஆண்டே புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்த, வாழும் வள்ளல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 495, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

495—

பேருந்து வசதி

***25022—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூரிலிருந்து E.பாதர்பேட்டைக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி மக்களின் நலன் கருதி, முழுமையான பேருந்து வசதிகளை வழங்கும் வகையில், இரண்டே ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா